திசையன்விளைப் பேரூராட்சியில் குடிநீர் வழங்குதிட்டம்

*வினா எண். 150:—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா:—

(அ) திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியில் உள்ள திசையன்விளை பேரூராட்சி மன்றத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா ?

(ஆ) 1980-81—ம் நிதியாண்டில் அதனை நிறைவேற்றும் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : (அ) உள்ளது.

(ஆ) இத்திட்டம் 1981-82 நிதியாண்டு முடிவுக்குள் நிறை வேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[துணை வினா இல்லை]

பெரம்பலூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்

*வினா எண் 151:— திரு. ஜே. எஸ் இராசு: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) திருச்சி மாவட்டம் பெரம்பலூர் பேரூராட்சிப் பகுதிக்கு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் தேவை என்ற கோரிக்கை வந்ததா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) பெரம்பலூர், குரும்பலூர் பேரூராட்சிகள் மற்றும் மூன்று வழியோரக் கிராமங்கள் ஆகியவற்றுக்கென ஒரு கூட்டு குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்தின் பரிசிலனையில் உள்ளது.

திரு ஜே எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூருக்குக் குடி நீர் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென்று கோரிக்கை பல ஆண்டுகாலமாக வலியுறுத்தப் பட்டு வருகின்றது என்றாலும் அதற்கான முறையான முன் ஆய்வு செய்யப்பட்டு ஆண்டுகள் பல ஆயிற்று என்றாலும், இத்திட்டம் இன்னும் பரிசிலனையில் தான் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறார்கள். இத்திட்டம் எப்பொழுதுதான் அரசால் அனுமதிக்கப்படும் என்பதை அமைச்சர் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனை நிலையைத் தாண்டி கவலையளிக்கும் நிலைக்கு வந்துவிட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள் பேரூராட்சிகளின் நிதிநிலை இத்திட்டத்தைச் செயலாற்றுவதற்கான நிலையில் இல்லையென்பதால், இத்திட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை என தெரிவித்து, இத்திட்டத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டார், ஆனால், பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் மக்களின் அடிப்படைத் தேவை என்பதை கருத்தில் கொண்டு, அப்பேரூராட்சிகளின் நிதிநிலைமைகளை உயர்த்தும்படியான சாத்தியக்கூறுகளை ஆராயும்படி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

திரு ஜே எஸ். இராசு: பேரவைத் தலைவர் அவர்களே, 4, 5 மாதங்களுக்கு முன்னால் திருச்சியில் நடைபெற்ற குடிநீர் வடிகால் வாரியக் கருத்தரங்கில் இத்திட்டத்தின் அவசியம் குறித்து மேலும் நான் வலியுறுத்தியபொழுது, உலக வங்கி 'எய்டில்' (aid)ல் ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழாவது இந்தப் பெரம்பலூர் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அதனுடைய தலைவர் மதிப்பிற்குரிய திரு. ஈ. ஆர். கே. அவர்களிடம் நான் வலியுறுத்திக் கூறியிருக்கிறேன். அதற்குப் பிறகு அரசு அதிலே காட்டிய தீவிரமும் குடிநீர் வடிகால் வாரியம் காட்டிய தீவிரமும் என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று கேட்பதோடு, அருள்கூர்ந்து மிக விரைவில் அந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வாரா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அக்கருத்தரங்கில் விளைவுதானோ என்னவோ, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் மக்களின் அடிப்படைத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு. அப்பேரூராட்சிகளின் நிதிநிலையை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும்படி திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கேட்டுக் கொள்ளப்பட்டார். இது மாண்புமிகு உறுப்பினர் திரு ராசு அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாக, அந்தக் குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவரால் எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சி என்று கருதுகிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பெரம்பலூர் குடிதண்ணீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அந்தப் பேரூராட்சிகளின் நிதி நிலைகளை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு அம்மாவட்ட ஆட்சித் தலைவர் பணிக்கப்பட்டார் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது மாதிரி பல்வேறு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுகின்ற நேரத்திலே, மதுரை

1981 பிப்ரவரி 2]

மாவட்டத்திலே திருமங்கலம், போடிநாயக்கனூர், பட்டிவீரன்பட்டி ஆகிய பகுதிகளுக்குக் குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற கால தாமதம் ஆகிறது. நகராட்சிகளாக இருப்பவைகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுக்க வேண்டியது அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுத்தால், நிச்சயமாக மக்களிடமிருந்து வரிமூலமாக தேவையான பணத்தை வசூலிக்க முடியும். ஆகவே, பேரூராட்சிகளின் நிதிநிலையை உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்வதை விட்டுவிட்டு, விரைவாகப் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. ஜே. எஸ். இராசு: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுடைய வருமானத்தை அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் பற்றிய ஆய்வு கடந்த 7, 8 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது. அத்தகைய வாய்ப்பு இல்லையென்று பலமுறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் சொல்கிற அந்த ஆய்வின் பிரகாரம் பார்த்தால், இந்த நூற்றாண்டு நிச்சயமாக வராது என்பதை நான் மனபூர்வமாக அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்து, ஏதேனும் சிறப்புத் திட்டமாகக்கருதி, அரசின் கருத்துப்படி, 17,000 மக்கள் வாழ்கின்ற ஒரு மேஜர் பஞ்சாயத்துக்கு உதவுகின்ற வகையில், அவர் அந்தத் திட்டத்தைச் சீக்கிரமாக எடுத்துக் கொள்வாரா என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்பொழுது இல்லை.

கள்ளக்குறிச்சி—சின்னசேலம் குடிநீர் வழங்கு திட்டம்

*வினா எண். 152—திரு. க. ரங்கசாமி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கள்ளக்குறிச்சி—சின்னசேலம் ஆகிய இரு நகரங்களிலும் குடிநீர் வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) கள்ளக்குறிச்சி—சின்னசேலம் ஆகிய இரு நகரங்களுக்கு ஒருங்கிணைந்த குடிநீர்த் திட்ட உத்தேச மதிப்பீடு முடிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஒப்புதலுடன் செயற்குறிப்பு வரப்பெற்ற பின் அரசு தக்க நிர்வாக ஒப்புதல் அளிக்கும்.